# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

***(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி அமைச்சர் அவர்களால் 2021, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **95 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*:** *அவ்வாசகமானது (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 88 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனானது, தோற்றத் தவறுகையின்மேல் பதியப்பட்ட தீர்ப்பைத் தள்ளிவைக்கின்ற அல்லது தள்ளிவைக்க மறுக்கின்ற கட்டளையின் விடயத்தில் கேட்டுப் பெறப்பட்ட அனுமதியுடன் மாகாண மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு ஏற்பாடு செயதலாகும்.*

**குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)**

*ச. வ.- ஓ. 29/2021*

**(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*101 ஆம் அத்தியாயத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்தல்*

**2.** (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 88 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) தோற்றத் தவறுகையின்மேல் பதியப்பட்ட தீர்ப்பைத் தள்ளிவைக்கின்ற அல்லது தள்ளிவைக்க மறுக்கின்ற கட்டளையானது, அது எந்நிகழ்வுகளின்மீது நீதித் தீர்ப்பளிக்கப்படுகின்றதோ அந்நிகழ்வுகளை இணைத்தலும் எவ்வேதுக்களின்மீதும் ஆக்கப்படுகின்றதோ அவ்வேதுக் களைக் குறித்துரைத்தலும் வேண்டுமென்பதுடன், அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மேல்நீதிமன்றத்திடமிருந்து கேட்டுப் பெறப்பட்ட அனுமதியுடன் அத்தகைய மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யக்கூடியதாக இருத்தலும் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.